7

# கிறிஸ்து: உலகத்தின் இரட்சகர்

அப்போஸ்தலனாகிய யோவான், "பிதாவானவர் குமாரனை உலக இரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்" என்று எழுதினார் (1 யோவான் 4:14). இயேசு எண்ணற்ற கடமைகளை நிறைவேற்றினார் (எதிர்காலத்தில் நிறைவேற்றுவார்). அவர் தீர்க்கதரிசியாக, ஆசாரியராக, ராஜாவாக இருந்தார், இருக்கிறார். பின்னதாக ஒரு பாடத்திலே அவரின் கடைசிநாள் செயலாக நியாயாதிபதியாக இருப்பார் என்பதைக் கற்றுக் கொள்வோம். யோவான் பேசினதைப் பார்க்கிலும் குறிப்பிடத்தக்க கடமை, எப்படியிருப்பினும், வேறெதுவும் இருக்காது: தேவனுடைய குமாரன் உலக இரட்சகர்.

## கிறிஸ்து உலக இரட்சகர் என்று சொல்லுவதன் பொருள் என்ன?

பூமியிலே கிறிஸ்துவின் ஊழியம் என்னவாக இருந்தது? இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பது என்பது தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்வோர் மத்தியில் கூட மிக விசாலமான பிளவு ஏற்படும் பிரிவினை போதனைக் காணப்படும். அந்தப் பெரும் பிளவின் ஒருபக்கம் இயேசு கிறிஸ்து உலகத்தை சிறப்பான இடமாக்கி வாழ ஏதுவாக இரட்சிக்க வந்தார் என்று சொல்லுவோர் - அவருடைய தலையாய அக்கறையெல்லாம் சமூக நீதியும், அவருடைய குறிக்கோளெல்லாம் இருக்கிற அரசுகளை நீதியுள்ளவைகளாயும் சமுதாயத்தை இன்னும் நியாயமானதாகவும் மாற்றுவதுதான் என்பார்கள்.

இவ்விதமான போதனையிலே சில உண்மைகள் உள்ளன. இயேசுவின் வழிகளை, மனிதவர்க்கத்தால் பின்பற்றப்படுமேயாகில் சிறப்பான மக்கள் கூட்டத்தைக் காணலாம். அரசுகள் இன்னும் நீதியுள்ளவைகளாயிருக்கும்; தனிப்பட்ட ஒவ்வொருவரும் சந்தோஷமாயிருப்பார்கள், ஆரோக்கியத்துடன் ஒருவருக்கொருவர் உதவிகரமாயும் இருப்பார்கள்.

ஆயினும், கிறிஸ்துவின் வருகையின் தலையாய நோக்கம் உலகத்தை சிறப்பானதாக மாற்ற வேண்டும் என்பதற்கு சாட்சியங்கள் எதிராக அமைந்துள்ளன. இயேசு ஒருபோதும் புரட்சியை பிரசங்கிக்க வில்லை, அரசு தலைவர்கள் என்ன விதிகளை கைக்கொள்ள வேண்டுமென்று சர்வாதிகாரியாக கட்டளையிட முயன்றதில்லை, எல்லாரும் சம அந்தஸ்து கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னதில்லை. ஐசுவரியவான்களுக்கும் தரித்திரருக்குமிடையே இருக்கும் வேறுபாடுகளைக் கூட தவறு என்று அவர் ஆலோசனை கொடுத்ததில்லை.

மேலும், அவரைப் பின்பற்றிப்போன ஆதிக்கிறிஸ்தவர்கள், அதாவது முதல் நூற்றாண்டு சபை, மிகவும் பயங்கரமான அநீதிகள் நிறைந்திருந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தனர்; இருந்தும் அந்த சபை அரசியல்

நீதியற்றதாயிருந்தது. அதின் அங்கத்தினர்கள் புரட்சிகர கருத்துக்களை ஒருபோதும் பிரசங்கித்ததில்லை; ஒரு பட்டணத்தில் அதின் பிரசங்கியார்கள் நுழைந்தபோது, அவர்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள், சமுதாய நீதி எனும் சுவிசேஷத்தையல்ல.

அந்த பெரும் பிளவின் மறுபுறம் பார்த்தால் இயேசு ஜனங்களின் ஆத்துமாக்களை இரட்சிக்கும் பொருட்டு உலகத்தை இரட்சிக்க இயேசு வந்தார் என்று விசுவாசிக்கிறவர்கள் இருக்கின்றனர்! இந்த கிறிஸ்தவர்கள்தான் "சுவிசேஷக எண்ணமுடையோர்" எனப்பட்டனர். கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் பொதுவாக இப்படி பகுக்கப்பட்டாலும், இந்தக் கூட்டம் விசுவாசிக்கிற எல்லாவற்றையும் அல்லது போதிக்கிற எல்லாவற்றையும் நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. நமது அரசியல் தெரிவுகள், சமுதாய செயல்பாடுகள், மற்றும் மார்க்க நம்பிக்கைகள் அனைத்தும் "சுவிசேஷக எண்ணமுடையோர்" என்று சொல்லிக் கொள்வோர் போதிக்கும் கட்டுப்பாட்டிலும் இல்லை. எப்படியிருப்பினும், கிறிஸ்தவம் என்றாலே சுவிசேஷத்தை பிரசங்கிப்பது - நற்செய்தி, அல்லது "சுவிசேஷம் செய்தல்" (*எவாஞ்லியேன்* எனும் பதத்திலிருந்து வந்த வார்த்தை) - ஆத்தும இரட்சிப்பின் நோக்கத்திற்காக என்பதை ஏற்றுக் கொள்கிறோம்! சுவிசேஷகம் என்றால் அதுதான் பொருள் என்றால், சுவிசேஷகத்துக்கு அந்த அளவாகிலும் உரிமையிருக்கிறதே!

### இரட்சகராகிய கிறிஸ்து

இயேசுவின் ஊழியம் ஆத்துமாக்களை இரட்சிக்கவே என்று ஏன் சொல்லுகிறோம்? ஏனெனில் அதைத் தான் வேதம் சொல்லுகிறது.

> "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றார்" (மத்தேயு 1:21).
>
> "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்கா 2:11).
>
> "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" (லூக்கா 19:10).
>
> "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16).
>
> அந்த ஸ்திரீயை நோக்கி: "உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்" என்றார்கள் (யோவான் 4:42).
>
> இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும்

இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:30, 31).

''இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினால் உயர்த்தினார்'' (நடபடிகள் 5:31).

''அவனுடைய [தாவீதினுடைய] சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப் பண்ணினார்'' (நடபடிகள் 13:23).

இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். [குமாரானாகிய] அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (கொலோசெயர் 1:13, 14).

... பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது: பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக (தீத்து 1:4).

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் (2 பேதுரு 3:18அ).

பிதாவானவர் குமாரனை உலக இரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம் (1 யோவான் 4:14).

இந்த வசனங்களின் வெளிச்சத்தில், நாம் நம்பிக்கையோடே உறுதிப்படுத்துவது என்னவெனில், கிறிஸ்துவின் உபதேசத்தின்படி வாழ்வது ஒரு சிறப்பான உலகை உண்டு பண்ணக் கூடியதாயிருந்தாலும், இந்த உலகத்தை சிறப்பானதாக மாற்றும்படி கிறிஸ்து வரவில்லை. மனிதர்கள் வாசஞ்செய்கிற உலகத்தை - அவர்களுடைய பாவங்களிலிருந்து - இரட்சிக்கும்படியாகவே அவர் வந்தார்!

### கிறிஸ்து மட்டுமே இரட்சகராக இருக்கிறார்

இயேசு கிறிஸ்து "இரட்சகரில் ஒருவரல்ல"; அவர் *மட்டுமே* (ஒரே) இரட்சகர். அவர் சொன்னார், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவான் 14:6). அவரைக் குறித்து பேதுரு சொன்னார், ''அவராலேயன்றி ஒருவராலும் இரட்சிப்பில்லை, வானத்தின் கீழெங்கும் அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவுமில்லை'' (நடபடிகள் 4:12).

ஒருவர் கிறிஸ்துவினாலும் கிறிஸ்துவின் மூலமாகவும் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் என்று சொல்லுவது ஒரு குறுகிய மனப்பான்மை

என்பதுபோல தோன்றலாம். ஆயினும், குறுகிய மனப்பான்மையானாலும் இல்லாவிட்டாலும், வேதத்தை தேவனுடைய வசனம் என்று விசுவாசிப்பவர்கள் கிறிஸ்துவை விசுவாசித்து கீழ்ப்படிந்தாலொழிய ஒருவரும் இன்று இரட்சிக்கப்பட முடியாது என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளவும் அறிவிக்கவும் வேண்டும்.

## இயேசு எப்படி உலக இரட்சகரானார்?

கிறிஸ்து உலக இரட்சகரானால், அதினாலே அவர் நம்மை பாவங்களிலிருந்து இரட்சிக்கிறார் என்றால், எப்படி அவர் நம்முடைய இரட்சகரானார்? இந்தக் கேள்விக்குறிய பதில் இரு பகுதிகளைக் கொண்டது.

### அவர் உலகத்தில் வந்தார்

முதலாவதாக, அவர் உலகத்தில் வந்தார். தேவத்துவத்தில் இரண்டாவது நபராகிய அவர், தம்மைத்தாமே வெறுமையாக்கி தேவனுக்கு சமமாயிருந்தும் பூமியில் வந்து மனுஷனாக வாழ்ந்தார், "அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" (பிலிப்பியர் 2:5-8). வார்த்தையாக - ஆதியிலே தேவனிடத்தில், தேவனாக இருந்த அவர் (யோவான் 1:1) - "மாமிசமாகி, நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (யோவான் 1:14). மற்ற மனிதர்களெல்லாம் "மாமிசத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருப்பது போல அவரும் அவர்களைப் போலானார்," அவர் "எல்லாவற்றிலும் தமது சகோதரர்களைப் போலானார்" (எபிரெயர் 2:14அ, 17அ).

### நமது பாவங்களுக்காக மரிக்கும்படி வந்தார்

இரண்டாவதாக, இயேசு நமது இரட்சகராக மட்டுமே வரவில்லை, ஆனால் நமது பாவங்களை எடுத்துப்போடும் இந்த நோக்கத்துக்காக அவர் மரிக்கவும் செய்தார். "மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலிப்பியர் 2:8); அவர் "[மாம்சத்தையும் இரத்தத்தையும்] உடையவரானார்; மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்துக் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்" (எபிரெயர் 2:14, 15).

தமது ஆரம்ப கால ஊழியத்தின்போது, மனுஷ குமரான் "உயர்த்தப்படுவார்" என்பது தமது இறுதி விளைவு என்பதை முன்னறிந்து "உயர்த்தப் பட்டிருப்பார்" என்று சொன்னார் (யோவான் 3:14). தமது மரணத்தைக் குறித்து முன்னறிவிக்கும் அவர் (மத்தேயு 16:21), "அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்றார் (மாற்கு 10:45).

தமக்கு நெருங்கிக் கொண்டிருக்கும் மரணத்தைக் குறித்து கலங்கிக் கொண்டிருக்கையில், அவர் தம்மைத்தாமே, "நான் என்ன சொல்லுவேன் ...?" என்று கேட்டுக் கொண்டார். ஒரு சாத்தியக்கூறை அவர் ஆலோசித்தார்: "பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சித்துக் கொள்ளும், என்று சொல்லுவேனோ?" பிறகு அவர் தமக்குத்தாமே பதில் சொல்லி, "இல்லை, நான் அப்படிச் சொல்லக் கூடாது, இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்" என்றார் (யோவான் 12:27). இன்னொரு வார்த்தையில் சொன்னால், இயேசு தமது மரணவேளையை அனுபவிக்கும்படியே தாம் வந்ததாகச் சொன்னார்.

அவரது வாழ்வின் நோக்கமே அதுதான்.

அந்த நோக்கத்தை நிறைவேற்றினார். அவர் சிலுவையில் மரித்தார், நமது பாவங்களைச் சுமந்து கொடூரமான கோரச் சிலுவையின் மரணத்தினாலே அவர் நமது இரட்சகரானார். பவுல் இயேசுவை "மகா தேவனும் இரட்சகருமானவர்" என்றும் "நம்மை மீட்டுக் கொள்ள ... தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்" என்றும் பவுல் சொன்னார் (தீத்து 2:13ஆ, 14அ). இயேசுவின் ஜீவியமும் போதனைகளும் முக்கியமானவைகளாயிருந்தன, ஆனால் சிலுவையில் அவர் மரிக்காதிருந்திருப்பாரேயாகில் இழந்துபோன மனிதவர்க்கத்தை அவரால் மீட்கும் ஊழியத்தை செய்திருக்க இயலாது!

## கிறிஸ்துவின் இரட்சகர் எனும் காரியம் நமக்கு என்ன பொருள் படுகிறது?

*முதலாவதாக, இயேசு இரட்சகர் எனும் உண்மை இரட்சிப்பை சாத்தியமாக்குகிறது என்று பொருள்!* இயேசு "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்" (எபிரெயர் 2:9), ஆகையால், ஒவ்வொருவரும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள விடுதலை பெற்றிருக்கிறார்கள். தமது மரணத்தினால் அதை சாத்தியமாக்கினார்! இயேசு வந்து மரித்தபடியால், "எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகியுள்ளது" (தீத்து 2:11).

ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் இரட்சிப்பானது உண்மையாக சாத்தியப்படுவதற்கு முன், அவர் சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிய வேண்டும்! சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிய ஒருவர் என்ன செய்ய வேண்டும்?

1. இயேசுவை விசுவாசிக்க வேண்டும் (யோவான் 3:16; 5:24; மாற்கு 16:16; நடபடிகள் 16:31).
2. தன் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் (லூக்கா 13:3, 5; நடபடிகள் 17:30, 31).
3. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து, என்று அறிக்கையிட வேண்டும் (ரோமர் 10:9, 10; மத்தேயு 10:32, 33).
4. பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டும் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; 22:16).

*இரண்டாவதாக, இயேசு உலக இரட்சகர் எனும் பதம் இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு பிரசங்கிப்பதன் மூலம் மற்றவர்களையும் இரட்சிக்கப்பட வைக்க வேண்டிய பொறுப்புடையவர்களயிருக்கிறார்கள் என்று பொருள்.* கிறிஸ்து இல்லாமல் ஜனங்கள் இரட்சிக்கப்பட இயலாது என்பதால், சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாமல் அவர்கள் கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட இயலாது (ரோமர் 10:13-17; 1 கொரிந்தியர் 1:18-25; ரோமர் 1:16).

கிறிஸ்தவர்களுக்கு ஏராளமான பொறுப்புகள் உள்ளன! உலகம் இருளில் இருக்கிறது. பெரும்பாலான ஜனங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதில்லை ஆகையால் அவருடைய ஈவாகிய இரட்சிப்பைப் பெற இயலாது. அவர்களின் ஒரே நம்பிக்கை கிறிஸ்து தான், அவர்கள் கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட

ஒரே வழி கிறிஸ்தவர்கள் அவரைப் பற்றிச் சொல்லி "கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும்" அறிவிக்க வேண்டும். பிரதான கட்டளைக்கு கீழ்ப்படிகிற விஷயத்தில் நம்முடைய பொறுப்பை நாம் சந்திக்காவிட்டால், இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்படாதவர்களாகவே இருப்பார்கள்.

## முடிவுரை

இரண்டு நிறைவு கேள்விகள் கேட்கப்பட வேண்டும். முதலாவதாக, உலக இரட்சகரால் நீங்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறீர்களா? இல்லாவிட்டால், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கீழ்ப்படிதல் மூலம் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்! நீங்கள் உலகில் வாழ இன்னும் எவ்வளவு காலம் உங்களுக்கு அனுமதிக்கப் பட்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரியாது. இரண்டாவதாக, நீங்கள் இரட்சிக்கப் பட்டவராயின், மற்றவர்களை இரட்சிக்க உங்களால் இயன்றளவு சிறப்பான செயலைச் செய்கிறீர்களா? இயேசு உலக இரட்சகர்! அது ஒரு மாபெரும் செய்தி! நமது அண்டை அயலார்களுடன் அதை பகிர்ந்து கொள்வோமாக - நமது அண்டை வீட்டாரோடும் உலகில் உள்ள அனைவரோடும் பகிர்ந்து கொள்வோமாக.

---

## கிறிஸ்துவும் ஞானஸ்நானமும்

இயேசு கிறிஸ்து நமது இரட்சகரானபடியால், ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் குறித்த கேள்விக்கு ஞானஸ்நானம் எப்படி கிறிஸ்துவோடு கூட சம்பந்தப் பட்டுள்ளது என்று ஆராய்ந்து பார்த்து பதில் கொடுக்கப்பட வேண்டும்.

- இயேசு ஞானஸ்நானம் பண்ணப்பட்டார் (மத்தேயு 3:13-17), நாம் அவரது முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.
- இயேசு ஞானஸ்நானத்தைக் கட்டளையிட்டார் (மத்தேயு 28:19; நடபடிகள் 10:48), நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.
- இரட்சிக்கப்பட நாம் "கிறிஸ்துவுக்குள்" இருக்க வேண்டும் (காண்க எபேசியர் 1:3), நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம் (கலாத்தியர் 3:26, 27; ரோமர் 6:3).
- இரட்சிக்கப்பட, நாம் கிறிஸ்துவின் இரத்தத்துடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும், அது இயேசுவின் மரணத்தின்போது சிந்தப்பட்டது; மற்றும் நாம் அவருடைய மரணத்துக்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3, 4).
- நாம் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது, கிறிஸ்துவுடன் கூட அடக்கம் பண்ணப்பட்டும் எழுப்பப்படுவதன் மூலம் நாம் புதிய பிறப்பையும் புதிய ஜீவனையும் அனுபவிக்கிறோம் (யோவான் 3:3, 5; ரோமர் 6:3-6; கொலோசெயர் 2:12).
- இரட்சிக்கப் பட்டிருக்க, கிறிஸ்து அன்புகூருகிறதும், மரித்ததும், இரட்சிக்கிறதுமான சபையில் நாம் இருக்க வேண்டும் (எபேசியர் 5:23-25). அவர் தலையாயிருக்கிற அந்த சபைக்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம் (1 கொரிந்தியர் 12:13; காண்க மத்தேயு 16:18ஆ; கொலோசெயர் 1:18).